வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள்
ந.க.எண்: 3516 /ஆ4/ 2024 நாள்.09.05.2025

பொருள் : பள்ளிக்கல்வி –மானியக் கோரிக்கை எண் 43 – மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.07 பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளிகளுக்கும். 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பாராட்டுச்சான்றிதழ்– வழங்குதல் –தொடர்பாக .

பார்வை : 1) 2025–2026 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித்துறை மானியக் கோரிக்கை எண் 43 மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண் 07.

2) தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,ந.க.எண்.0027/ஐ/இ1/2025 நாள் 02.05.2025

=========

25.04.2025 அன்று நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்ட பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"<u>அறிவிப்பு எண் 07</u> : பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறும் அரசுப் பள்ளிகளுக்கும். 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கும் அரசுப் பள்னி ஆசிரியர்களுக்கும் பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்"

அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறன்களை படிப்படியாக வளர்த்து அவர்களை கல்விச் செயல்பாடுகள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளில் நன்முறையில் ஈடுபடுத்துவதன் மூலம் அரசுப்பள்ளிகளின் கல்வித்தரம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதனை மேலும். ஊக்கப்படுத்துவதற்காக பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெறுகின்ற பள்ளிகளுக்கு அரசின் சார்பாக பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் 100 விழுக்காடு தேர்ச்சி வழங்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கிடும் பொருட்டு வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மார்ச்–2025 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு முடிவுகள் 08.05.2025 அன்று வெளியிடப்பட்டதை தொடர்ந்து 100 விழுக்காடு தேர்ச்சி பெற்ற பள்ளிகள் மற்றும் 100 விழுக்காடு தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களின் விவரங்களை இத்துடன்

இணைத்துள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 14.05.2025 அன்று மாலை 3.00 மணிக்குள் மறுநினைவூட்டிற்கு இடமளிக்காமல் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மார்ச் /ஏப்ரல் –2025 பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட மறுதினமே 100 விழுக்காடு தேர்ச்சி பெற்ற பள்ளிகள் மற்றும் 100 விழுக்காடு தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களின் விவரங்களை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலக (இடைநிலை) தேர்வுகள் பிரிவில் சமர்ப்பித்திட தெரிவிக்கப்படுகிறது.

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் ( இடைநிலை) அவர்கள் படிவத்தினை தொகுத்து முதன்மைக்கல்வி அலுவலகத்தில் 21.05.2025 முற்பகல் 11.00 மணிக்குள் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு :

- மாதிரி படிவம்.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர் .

பெறுநர்:
அனைத்து அரசு /ஆதிதிராவிட நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் , வேலூர் மாவட்டம்.

நகல்:

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலை ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை /தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி)தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.